விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 314 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 11 திங்கட்கிழமை (28.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அநுரவின் பாராளுமன்ற ஆட்சி 3 கிழமைக்குக்கூட நகராது!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் ஆரூடம்



(நீர்கொழும்பு)

என்னைப் போலவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் பெரும்பான்மைப் பலம் அற்ற ஜனாதிபதியாகக் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியால் பாராளுமன்றத்தினை மூன்று மாதங்கள் அல்ல மூன்று கிழமைகூடக் கொண்டு செல்ல முடியாத நிலையே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (04ஆம் பக்கம் பார்க்க)

## யானை தாக்கி இளைஞன் பலி

### முத்தையன்கட்டில் சம்பவம்

(முத்தையன்கட்டு)

முத்தையன்கட்டுப் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். 11

## கிணற்றில் வீழ்ந்த பெண் உயிரிழப்பு

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் நேற்று அதிகாலை பெண்ணொருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யோகநாதன் இந்திராணி (வயது-67) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் 11

## தாக்குதல் நடத்தியவர்களுடன் பொலிஸார் சேர்ந்துள்ளனர்

### சட்டத்தரணி மணிவண்ணன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தன்னை ஊழலுக்கு எதிரான நேர்மையான அரசியல்வாதியாக வெளிக்காட்டிக்கொண்டு, தனக்குக் கீழுள்ள பொலிஸ் திணைக்களம் ஊடாக மிகக் கீழ்த்தரமான அரசியலை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 11

## யாழ். மண்ணுக்கு மீண்டும் வருகிறாள் யாழ் தேவி



(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை தொடக்கம் கொழும்பு வரையான வடக்கு புகையிரத மார்க்கத்தின் சேவைகள் இன்று முதல் வழமைக்கு திரும்புவதாக இலங்கைப் புகையிரதத் திணைக் 11

## பிரிக்ஸின் அங்கத்துவம் இலங்கைக்கு இல்லை

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

பிரிக்ஸ் அமைப்பில் முழு உறுப்பினராகச் சேர்வதற்கான இலங்கையின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை 11

### அறுகம்பேயில் வெடிகுண்டு

## சுற்றுலாவிகளை மிரட்டியவர் பொலிஸாரால் கைது

(அறுகம்பே)

அறுகம்பேயில் வெடிகுண்டுகள் இருப்பதாகக் கூறி அங்கு பிரவேசித்த சுற்றுலாப் பயணிகளை மிரட்டிய நபர் ஒருவர் பொத்துவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அறுகம்பேயின் 3 இடங்களில் வெடிகுண்டுகள் இருப்பதாகவும் 11

## நாட்டிலுள்ள அரசியல் வியாபாரம் மாற வேண்டும் - அநுர

(களுத்துறை)

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இந்த நாட்டின் அரசியலை மாற்ற வேண்டும்.

இங்கு அரசியல் வியாபாரமாக உள்ளது. இந்நிலை மாற வேண்டும் 12









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு

21 - 06 - 1963



இறப்பு

25 - 10 - 2024

## திருமதி.கிரிதா பாலசுந்தரம்

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கிரிதா பாலசுந்தரம் அவர்கள் 25.10.2024 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நித்தியானந்தம்- கற்பகம் தம்பதியினரின் அன்பு மகளும், ஐயாத்துரை-லீலாவதி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சண்முகம் பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், லஜிதா, பிரகாஸ், சிவகாஸ், தேவகாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கார்த்தீபன், கிரிஷாந்தி, குகாஜினி, அனுசியா ஆகியோரின் மாமியும், அபிரன், ரேஜிகனின் அம்மம்மாவும், துருவ்கரிகாலன், கீர்த்திக்கரிகாலனின் அப்பம்மாவும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி, லங்கநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், நகுலராசா, தர்சினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2024.10.28 இன்று திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 736 1932

ராஜன் ஹாட்வெயார்,
பருத்தித்துறை.

(c-1463)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தனது வணிக நடவடிக்கைகளை முடித்துக் கொண்ட மெக்டொனால்ட்ஸ்





(கொழும்பு)

மெக்டொனால்ட்ஸ் குழுமம் மற்றும் அதன் இலங்கையிலுள்ள கிளைகளுக்கு உரிமையாளரான சர்வதேச உணவக அமைப்புகள் நிறுவனம் தங்களது வணிக உறவை முறித்துக்கொண்டதாக கூட்டாக அறிவித்துள்ளது.

இலங்கையில் தனது கிளைகளுடனான வணிகத்தை முடித்துக் கொள்வதோடு, தங்களுக்கு ஆதரவு அளித்த பொது மக்களுக்கு நன்றியை மெக்டொனால்ட்ஸ் தெரிவித்துள்ளது.


மெக்டொனால்ட்ஸ் குறித்து அண்மைக் காலங்களில் ஊடகங்களில் வெளிவந்த வதந்திகள் அல்லது ஊகங்களை நம்பவேண்டாம் எனப் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளன.

குறித்த அறிக்கையில் மெக்டொனால்ட்ஸ் கிளைகளை இலங்கையில் மூடுவதற்கான காரணங்கள் பற்றிய விபரங்களை வழங்கவில்லை. மெக்டொனால்ட்ஸ் இலங்கையில் புதிய செயற்பாடுகளைத் தொடருமா என்பதைக் குறிப்பிடவில்லை.(நி-8)


பாராளுமன்றத் தேர்தல் -2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் இல : 10
சர்வசன அதிகாரம் கூட்டணியில்
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பட்டியலில்
நம்பிகள் நல்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையாதரவுடன்
இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை ஆதரவுடன்
இலஞ்சம், ஊழல், தாமதத்தை இல்லாதொழிக்கவும், பெண்ணிய விடுதலை, சமூக விடுதலைக்கூடாக சமத்துவம், சமதர்மம், சோசலிஸ பாதையினூடாக தமிழ்த் தேசிய விடுதலையைப் பெற்றுக் கொள்ள...
பதக்கச் சின்னத்தில் இலக்கம் 8 இற்கு வாக்களித்து
வி.கே.தனபாலா அவர்களை
வெற்றிபெறச் செய்யுங்கள்

V.K.தனபாலா
B.A (Cey), P.G.D.in.pub.Admin, Dip.in. Sinhala.
அரசறிவியல் விரிவுரையாளர், முன்னாள் கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், கராத்தே ஆசிரியர்(5 th Dan) (019)
சர்வசன அதிகாரம்
සර්වජන බලය
SARVAJANA BALAYA
X
1 2 3 4 5 6 7 8 9



பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தபால் மூல வாக்காளர்களே !

அரச உத்தியோகத்தர்களின்
தகுதியான பதவி உயர்வுகளுக்குக் குரல்கொடுக்க
நியாயமற்ற இடமாற்றங்களை எதிர்க்க
போதிய சம்பள உயர்வை வலியுறுத்த
மேலதிகக் கடமைநேரக் கொடுப்பனவை முன்மொழிய
வெளிமாவட்டங்களில் உரிய சேவைக்காலம் நிறைவுற்றும் அல்லற்படும் உங்களின் குரலாக ஒலிக்க

உங்களின் தெரிவு
கனகரட்ணம்
சுகாஷ்
(சட்டத்தரணி)
X 1
(சி-030)
இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!


# ஜனாதிபதி அநுர இந்தியா விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முதலாவது அரசமுறை வெளிநாட்டுப் பயணமாக இந்தியா செல்ல உள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி ஜனவரி மாதத்தில் டில்லிக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார குழு பங்கேற்க உள்ளது.

இதன்போது, பிரதமர் நரேந்திரமோடி மற்றும் ஜனாதிபதி திரௌபதி முர்மு உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து இரு தரப்புக் கலந்துரையாடல்களை முன்னெடுக்க உள்ளனர்.

இலங்கை - இந்திய பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார உறவுகள் குறித்து பரந்துபட்ட பேச்சு வார்த்தைகளில் இரு தரப்பும் ஈடுபட உள்ளன. இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற இந்தியத் திட்டங்கள் குறித்து இலங்கை குழு அவதானம் செலுத்த உள்ளது.

இதேவேளை, பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்திற்கான அழைப்பினை அநுரகுமார கையளிக்க உள்ளார். மோடியின் விஜயமானது இலங்கையின் சுதந்திர தினத்தன்று இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-8)

# சலுகைகள் எதுவும் கிடைக்காது என்பதால்

# அரசியலில் இருந்து பலர் ஓய்வு

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



**(கொழும்பு)**

**தேர்தலில் வெற்றிபெற்றாலும் சலுகைகள் எதுவும் கிடைக்காது என்பதனாலேயே பலர் இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் விலகியுள்ளதுடன் அரசியலில் இருந்தும் ஓய்வு பெற்றுள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு கிடைத்த வெற்றி என்பது உண்மையில் மக்கள் பெற்ற வெற்றியாகும். அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வழங்கிய ஆணையின் விளைவாக, எதிர்வரும் பொதுத்தேர்தலின் முடிவும் தெளிவாகியுள்ளது.

இந்த அரசியல்வாதிகள், தாங்கள் மக்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்டதை முன்கூட்டியே உணர்ந்து தேர்தலில் போட்டியிடுவதில்லை யென முடிவு செய்துள்ளனர். தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் அது வீணானது என்று நினைக்கின்றனர்.

வாகன அனுமதிப் பத்திரம், பாதுகாப்புப் பணியாளர்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள் போன்றவற்றைப் பெறமாட்டார்கள் என்பதும், ஊழலில் ஈடுபடும் நிலையில் இருக்க மாட்டார்கள் என்பதும் அவர்களுக்கு உறுதியாகத் தெரிந்துவிட்டது. எதிர்க்கட்சியில் இருந்தாலும் தங்களால் பழைய ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

இதனால்தான் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசியலில் இருந்து விலகி தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்க்க முடிவு செய்திருந்தனர் என குறிப்பிட்டுள்ளார்.(நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் சரிந்தது இந்திய துடுப்பாட்டம்; டெஸ்ட் தொடரை இழந்து ஏமாற்றம்

## வரலாறு படைத்தது நியூசிலாந்து




மிட்சல் சாண்டரின் மாயஜால சுழல் பந்துவீச்சு கைகொடுக்க புனே டெஸ்டில் அசத்திய நியூசிலாந்து அணி இந்திய மண்ணில் 68 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் தொடரை வென்று வரலாறு படைத்தது. கடந்த 2012க்குப் பின் சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை இழந்து இந்தியா ஏமாற்றமடைந்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் இந்தியா தோற் றது. இரண்டாவது டெஸ்ட் புனேயில் நடந்தது.

முதல் இன்னிங்சில் நியூசி லாந்து 259, இந்தியா 156 ஓட்டங் கள் எடுத்தன. இரண்டாவது நாள் முடிவில் நியூசிலாந்து அணி, இரண்டாவது இன்னிங்சில் 198/5 ஓட்டங்கள் எடுத்து, 301 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

பிளன்டெல் (30), பிலிப்ஸ் (9) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

நேற்று முன் தினம் மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. பிளன்டெலை (41), ஜடேஜா போல்டாக்கினார். சான்ட்னர் (4), ரிம் சவுத்தீ (0), அஜாஸ் படேல் (1) நிலைக்கவில்லை. கடைசியில் ரூர்கே (0) ரன் அவுட்டானார். நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 255 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தியாவுக்கு 359 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

**ஜெய்ஸ்வால் ஆறுதல்**

கடின இலக்கை விரட்டிய இந்திய அணி மீண்டும் சான்ட்னர் "சுழலில்" சிக்கியது. அணித் தலைவர் ரோகித் (8) அணியை கைவிட்டார். சுப்மன் 23 ஓட்டங்கள் எடுக்க, ஜெய்ஸ்வால் 77 ஓட்டங்கள் எடுத்து ஆறுதளித்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹோலி 17 ஓட்டங்கள் எடுத்தார். ரிஷாப் பன்ட் "டக்" அவுட்டானார். வோஷிங்டன் 21, அஷ்வின் 18 ஓட்டங்கள் எடுத்து திரும் பினர்.

கடைசியில் ஜடேஜா (42) அவுட்டாக, இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நியூசிலாந்து அணி, இந்திய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொடரை (2-0) எனக் கைப்பற்றியது.

இரு அணிகள் மோதும் மூன்றாவது போட்டி நவ. 1 - 5இல் மும்பையில் (வான்கடே) நடக்க உள்ளது.

**முதன் முறை**

கடந்த 1955-56 முதல் இந்திய மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது நியூசிலாந்து அணி. கடைசியாக 1988ல் இந்திய மண்ணில் நியூசிலாந்து (236/10, 279/10) அணி, வான்கடே டெஸ்டில் வெற்றி பெற்றது. இதன்பின், சமீபத்தில் பெங்களூரு டெஸ்டில் அசத்திய நியூசிலாந்து அணி, இந்திய மண்ணில் 36 ஆண்டுகளுக்குப் பின் முதல் வெற்றி பெற்றது.

தற்போது புனே டெஸ்டிலும் சாதித்த நியூசிலாந்து அணி, 68 ஆண்டு வரலாற்றில் முதன் முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வென்று வரலாறு படைத்தது. (7)




ஆர்ப்பரித்த மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு

## அநுரவின்...

புதிய ஜனநாயக முன்னணியினால் நேற்றுக் காலை நீர்கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், "அவர்களின் வேட்பாளர் பட்டியலைப் பார்த்தால் அவரது அரசாங்கம் மூன்று மாதங்கள் அல்ல மூன்று வாரங்களேனும் கொண்டு செல்ல முடியுமா? என்று எனக்குத் தெரியவில்லை.

நாட்டிற்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. அனுபவமுள்ளவர்களை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவர்களில் பெரும்பான்மையானவர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புங்கள் நாட்டை முன்கொண்டு செல்வதற்கு.

அனுபவம் வாய்ந்த பெரும்பான்மையானவர்கள் இருந்தால்தான், அநுரவால் மூன்றாண்டுகள் ஏனும் செல்ல முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதால் என்னை வீட்டில் இருக்குமாறு சொல்கின்றனர்.


நான் தோற்றதை ஒப்புக்கொள்கிறேன். நான் ஜனாதிபதித் தேர்தலுக்கு வந்தேன், வாக்குக் கேட்டேன்.

பெரும்பான்மையானவர்கள் எனக்கு வாக்களிக்கவில்லை. அதனால் தோற்றேன். ஆனால் ஜனாதிபதி அநுரவுக்கும் பெரும்பான்மை வழங்கப்படவில்லை. 51% கிடைக்கவில்லை. அவருக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?

நான் பெரும்பான்மை இல்லாத முன்னாள் ஜனாதிபதி, அவரும் பெரும்பான்மை இல்லாத தற்போதைய ஜனாதிபதி. அவருக்கும் இல்லை, எனக்கும் இல்லை, அவ்வளவுதான்" என்றார். (ந-7)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 09 - 1972



மறைவு 27 - 10 - 2024

### சிவகுரு மோதிலால் கந்தையா
(சிரேஷ்ட கணக்காளர் – மாநகரசபை, வவுனியா)

நவாலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு மோதிலால் கந்தையா அவர்கள் 27.10.2024 நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவகுரு - இராசபூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் மிரியம் வொலன்ரினா (பவா, அபிவிருத்தி உத்தியோகத்தர், செட்டிக்குளம் - பிரதேச செயலகம்) அவர்களின் பாசமிகு கணவரும் கஷோனா, அஸ்ரீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகஜீவன்(ஆசிரியர் - கொழும்பு சர்வதேச பாடசாலை), கேதாரகௌரி(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), வித்தியாகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுஜித்தா, ஜெகஜீவன்(பணிப்பாளர், மத்திய வங்கி - ERD), மதிவர்ணன் (ஆசிரியர் - யாழ். பரியோவான் கல்லூரி), மோகனராஜ்(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - சங்கானை) ஆகியோரின் பாசமிகு மைத்துனனும் தேஜனா, ஜஸ்வந்தி ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும் ரிஷியா, ஜயவன், டவர்ஷன், அனோமிதன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பெரிய மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

077 6866 337 (492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன உணவு, மருந்துகள்; மோசடி தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு)

சீனாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உணவு, மருந்துகள் மற்றும் விற்றமின்கள் காலாவதியாகும் திகதி மாற்றப்பட்டதன் பின்னர் அவற்றை மீள் விற்பனை செய்யும் மோசடி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி கும்பலை நுகர்வோர் சேவை அதிகார சபையின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரபல சீன உணவு விற்பனை நிலையம் சீன உணவுகள், மருந்துகள் மற்றும் விற்றமின்களை விற்பனை செய்கிறது.

சீன உணவுகளை விரும்பும் இலங்கையர்களும் சீனர்களும் இந்த இடத்திற்கு வருகை தருகின்றனர்.

இத்தகைய பின்னணியில் காலாவதியான பொருட்களின் லேபிள்களை மாற்றி மீண்டும் விற்பனை செய்வதாக தகவல் கிடைத்தது.

அதன்படி, வாடிக்கையாளர் சேவை விவகார அதிகாரசபை மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அவ்விடத்திற்கு சென்று சோதனையிட்டுள்ளனர்.

அங்கு நடத்தப்பட்ட தேடுதலின் போது இது தொடர்பான தகவல்களை உறுதி செய்ய முடிந்தது. அதன்படி, சம்பந்தப்பட்ட இடத்தில் காலாவதியான உணவுப் பொருட்கள் கையிருப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

அங்குள்ள சில பொருட்களுக்கு காலாவதி திகதி கூட இல்லை. மேலும் அங்கு காலாவதியான மருந்துகள் மற்றும் விற்றமின்கள் பதுக்கி வைத்திருந்ததை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர், மூன்று தளங்கள் கொண்ட கடைக்கு, வாடிக்கையாளர் சேவை ஆணைய அதிகாரிகள் சீல் வைத்தனர். (நி-8)






# 9 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு சுமார் 9 ஆயிரம் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரே பாடசாலையில் 10 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசியல் தலையீடுகள் காரணமாக கடந்தகாலங்களில் ஆசிரியர்களின் இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)


## வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

**பாரவூர்தி மற்றும் இரும்பு பெட்டகங்களுக்குமான பகிரங்க ஏல விற்பனை**

எமது சங்கத்திற்கு சொந்தமான 42-1518 (Asok Ledan) இலக்கம் உடைய பாரவூர்தி மற்றும் மூன்று இரும்புப் பெட்டகங்கள் பகிரங்க ஏல விற்பனை 19.11.2024 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள வேலணை பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற உள்ளது. அவ்லொறியினையும் மூன்று இரும்புப் பெட்டகங்களினையும் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ள விரும்புவோர் ஏல விற்பனை திகதி அன்று காலை 9.30 மணிக்கு முன்னர் பாரவூர்திக்கு மீளளிக்க முடியாத முற்பணம் ஆக ரூபா 1000.00மும் மீளளிக்கக் கூடிய முற்பணம் ஆக ரூபா 10000.00மும் இரும்புப் பெட்டகத்திற்கு மீளளிக்கமுடியாத முற்பணம் ஆக ரூபா 1000.00மும் மீளளிக்கக் கூடிய முற்பணம் ஆக 3000.00மும் தலைமைக்காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ளமுடியும் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

**நிபந்தனை 01-** ஏல விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களுக்கான பணத்தினை உடன் செலுத்தி பொருட்கள் அலுவலக வளாகத்திலிருந்து கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

**தலைவர்,**
**வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்.**
**தொலைபேசி இலக்கம்: 075 876 5047, 077 101 2310.**

(2516)


# லெபனானில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள்

(கொழும்பு)

லெபனானில் இருந்து நாடு திரும்புவதற்கு எதிர்ப்பார்த்துள்ள நபர்களை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முதல் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானில் உள்ள இலங்கை தூதரகம் அறிக்கையின் ஊடாக இதனை தெரிவித்துள்ளது.

போர்நிலைமை காரணமாக லெபனானில் வசிக்கும் இலங்கையர்கள் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளமையினால் நாடு திரும்புவதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாடு திரும்புவதற்கு எதிர்ப்பார்த்துள்ள இலங்கையர்கள் கடவுச்சீட்டு மற்றும் விசா அனுமதி பத்திரம் ஆகிய ஆவணங்களை எடுத்துச் செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (நி-8)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

Western Union WU MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**

(490)


# இராசிபலன்

28.10.2024
ஐப்பசி 11, திங்கட்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.27 மணிவரை

பூரம் முன்னிரவு 6.14 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்: உத்தராடம், திருவாதிரை.

**வளவன்**




தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு திருப்தி ஊஷீவ;வகையில் அமையும்.




வார்த்தைகளால் காரியம் சாதிப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், ஆரோக்கியமான நாள்.




நண்பர்கள் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், முயற்சிகள் கைகூடும்.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், உடல் நலனின் கவனம் எடுக்க வேண்டிய நாள், தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் உருவாகும்.





குடும்பத்தினரிடையே இருந்த மனஸ்தாபங்கள் அகலும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்களால் பலனுண்டு.




உடல் நலனின் இருந்த பாதிப்புக்கள் அகலும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் வளர்ச்சிக்கு ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கடினமான உழைப்பு என்பது தெய்வ வழிபாட்டிற்கு சமமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை யா/மகாஜனக் கல்லூரியின் ஓய்வு பெற்று பிரதி அதிபர் நடராசாபவனின் மணிவிழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.
(படம்: ஈச்சமோட்டை செய்தியாளர்)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் பொதுத்தேர்தல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாண அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேட்சைக்குழு தலைவர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இம்முறை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக் களும் போட்டியிடுவதாகவும், 6 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 396 வேட்பா ளர்கள் போட்டியிடுகிறார்கள் எனவும் ஆதலால் வேட்பா ளர்கள் சட்டங்கள் மற்றும் சுற்றுநிருபத்திற்கு அமைய ஜனநாயக ரீதியில் பிரசார நடவடிக்கைகளை எதுவிதமான முரண்பாடுகளுமின்றி ஆரோக்கியமாக மேற்கொள்வதனை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்.மாவட்டத்தில் 511 வாக்களிப்பு நிலையங்களுக்கும், யாழ்.மத்திய கல்லூரியில் அமைக்கப்படவுள்ள 48 வாக்கெண்ணும் நிலையங்களுக்கும் 17 அஞ்சல் வாக்கெண்ணும் நிலையங்கள் மற்றும் பெறுபேறு தயாரித்து வெளியிடும் நிலையத்திற்கும் வேட்பாளர்களின் முகவர்களை சரியான பொறிமுறையூடாக சட்டத்தின் மூலம் நியமித்து நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

இம் முறை மாவட்டச் செயலகத்தில் இயங்கும் முறைப்பாட்டுப் பிரிவுக்கு மேலதிகமாக சாவகச்சேரி, சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் முறைப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் தெளிவூட்டல்களை முன்வைத்தார்.

இதன்போது அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேட்சைக்குழுத் தலைவர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# மண்டபம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பழைய மாணவர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் புண்ணியமூர்த்தியின் நிதிப் பங்களிப்பில் யா/அச்சுவேலி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த மண்டபம் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.39 மணிக்கு கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-8)

# 12 தமிழக மீனவர்கள் பருத்தித்துறையில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 12 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து படகொன்றில் வந்த 12 பேர் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை அப்பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவர்களைக் கைது செய்ததுடன் அவர்களின் படகினையும் கைப்பற்றினர்.

கைதானவர்களையும் படகினையும் மயிலிட்டிக் கரைக்கு கொண்டு வந்துள்ள கடற்படையினர் அந்நபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (6-8-33-60)

## மீனவர் விவகாரம்

# இலங்கை வரவுள்ள பிரதிநிதிகள் குழு

(கொழும்பு)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இந்திய பிரதிநிதிகள் குழுவினர் நாளை மறுதினம் நாட்டிற்கு வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 பேர் கொண்ட குழுவினர் இவ்வாறு நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்குமாறு கோரி இந்திய மீனவர்கள் நேற்று முன்தினமும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மேலும் 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## வடக்கு மாகாண

# நீர்வளங்கள் உத்திகளும் கொள்கையும் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண நீர் வளங்களும் அவற்றின் பயன்பாட்டு உத்திகளும். பங்கீட்டுக் கொள்கையும் என்ற தலைப்பில் இரண்டு மொழியில் மொழி பெயர்ப்புச் செய்த நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு யாழ். தந்தை செல்வா கேட் போர் கூடத்தில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், விவசாய நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகு, யாழ். கிளிநொச்சி பல்கலைக்கழக பொறியியல் பீட பேராசிரியர் தி. திருவரன், யாழ்., கிளிநொச்சி பல்கலைக் கழக பொறியியல் பீட பீடாதிபதி கலாநிதி. ஆ. கணேஷ்வரன், பொறியியல் சேவைகள் பதில் பிரதம செயலாளர் எந்திரி. ந.சுதாகரன், யாழ்., கிளிநொச்சி பொருளியியல் பீடம் கலாநிதி பா. கேதீசன் மற்றும் கலாநிதி. ப. கதிர்காம நாதன், வடக்கு மாகாண மேலதிக நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி. த. ராஜகோபு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் ஆய்வுகளை, புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் செயலாளர் எந்தரி. வே.இரகுநாதன், யாழ். பல்கலைக் கழக விவசாய பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சு. ராஜதுரை, வவுனியா பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்தகோபன் மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் க.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
6 இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, Teacher (London)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்
தொ.இ: B/14890

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா: 22 3/4
உயரம்:5'8"
தகைமை/தொழில்: O/L, விவசாயம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14891

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 23 3/4
8 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc, Own Shop
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்
தொ.இ: B/14892

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சதயம்
12 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Fiber Freelancing (pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14784

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 55
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA (Following)
எதிர்பார்ப்பு: Engineer, QS, TO
தொ.இ: G/14787

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கேட்டை
11 இல் சூரி செவ்
உயரம்: 4'9"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு
தொ.இ: G/14788

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அக்கராயன் வனப்பகுதிக்குள்

## வீசப்பட்ட 10000 விதைப்பந்துகள்



(கிளிநொச்சி)

விவேகானந்த வித்தியாலய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சுமார் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட விதைப்பந்துகள் அக்கராயன் காட்டுக்குள் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அதிகாரிகளாலும் வீசப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டுக்கான விதைப்பந்து திருவிழாவின் இறுதி மற்றும் பிரதான நிகழ்வாக கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 இடம்பெற்றிருந்த வேளை குறித்த காட்டினுள் விதைப்பந்துகள் வீசப்பட்டிருந்தன. இன்று உலகம் எதிர் கொள்கின்ற மிக ஆபத்தான பிரச்சினையாக காடு அழிப்பு உட்பட எமது சுற்றுச்சூழலில் ஏற்படும் பாதிப்புக்களின் விளைவாக கால நிலை மாற்றம் நிலவுகிறது.

எனவே, எமது சூழலை பாதுகாத்து, அடுத்த சந்ததியினருக்கு கொடுப்பதற்காகவும் மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

விதைப்பந்து வீசும் செயற்பாட்டில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம். றியாஸ் அகமட், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் சி. லதீஸ்குமார், வன பாதுகாப்பு திணைக்களத்தின் வன விரிவாக்க உத்தியோகத்தர், கிளிநொச்சி மகா வித்தியாலய பிரதி அதிபர் அரவிந்தன், சூழலியலாளரும் இலங்கை வனவிலங்குகள் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் வட மாகாண பிரதிநிதியுமான ம.சசிகரன், ஊடகவியலாளரும் சூழலியலாளருமான மு.தமிழ்ச்செல்வன், கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் மற்றும் கிளி/இரா்மநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலர் இணைந்துகொண்டனர்.

ஓராயம் அமைப்பின் அனுசரணையுடன் கிளி/விவேகானந்த வித்தியாலயத்தினால் இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 100,907 பேர் வாக்களிக்கத் தகுதி



(தருமபுரம்)

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் யாழ்.தேர்தல் மாவட்டத்தின் கிளிநொச்சி தொகுதியில் வாக்காளர் அட்டைகள் வழங்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் 100,907 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இவர்களுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணியில் தபால் உத்தியோகஸ்த்தர்கள் மாவட்டத்தின் பல பகுதிகளில் முன்னெடுத்து இருந்தனர். (6-8-316)

# பட்டியில் நின்ற மாடு திருட்டு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் பட்டியில் நின்ற வளர்ப்பு மாட்டினை திருடிச் சென்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கோம்பாவில் பகுதியில் வீட்டுக் காணி ஒன்றில் இருந்த சிறிய பட்டியில் சிறுகன்றுகளின் தாய்மாடு திருடி செல்லப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த கால் நடைவளர்ப்பு உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு வழங்கப்பட்டதனையடுத்து சம்பவம்தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மைக்காலமாக வளர்ப்பு மாடுகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3248

மிதுன்




வந்தனா




சந்தியா





யோகி




சரண்




நிதுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 617





செம்பியன் மாதேவி ஒன்றும் புரியாதவராகத் திகைத்து நின்றார். 'பழையாறை மக்களின் இதயங்களைக் கொள்ளை கொண்டிருந்த பொன்னியின் செல்வனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்து விட்டது' என்பதை மட்டும் அறிந்தாள். அது என்ன ஆபத்து? எப்படி நேர்ந்தது? பழுவேட்டரையர்களே ஏதேனும் விபரீதமான காரியம் செய்து சோழ குலத்துக்கும் மதுராந்தகனுக்கும் அழியாத பழியை உண்டாக்கி விட்டார்களோ?

இச்சமயத்தில் தஞ்சாவூர் தூதர்கள் இடித்துப் பிடித்து ஜனங்களைத் தள்ளிக் கொண்டு முன்னால் வந்து சேர்ந்தார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு வந்த சேவகர்களில் ஒருவன், "பெருமாட்டி! இவர்கள் தஞ்சாவூரிலிருந்து முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள்!" என்றான்.

செம்பியன் மாதேவி ஜனக் கூட்டத்தைப் பார்த்துக் கைகூப்பிவிட்டு தூதர்களை நோக்கி, "என்ன செய்தி கொண்டு வந்தீர்கள்?" என்று கேட்டார்.

"தாயே! மிகத் துயரமான செய்தி கொண்டு வந்திருக்கும் அபாக்கியசாலிகள் நாங்கள். சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரில் இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கையிலிருந்து கோடிக்கரைக்குக் கப்பலில் வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் சுழிக்காற்றில் கப்பல் அகப்பட்டுக் கொண்டு விட்டது. துணையாக வந்த கப்பல் உடைந்து முழுகி விட்டது. அதிலிருந்தவர்களைக் காப்பாற்றுவதற்காக இளவரசர் கடலில் குதித்தார். பிறகு அகப்படவில்லை. கடலிலும் கடற் கரையெங்கும் தேடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. சக்கரவர்த்தியும், மலையமான் மகளாரும் இச்செய்தியைக் கேட்டுப் பெருந்துயரில் ஆழ்ந்திருக்கிறார்கள். தங்களையும் மதுராந்தகத் தேவரையும், இளைய பிராட்டியையும் உடனே புறப்பட்டு தஞ்சைக்கு வரும்படி சக்கரவர்த்தி எங்கள் மூலம் செய்தி அனுப்பி இருக்கிறார்!"

இவ்வாறு தூதர்கள் கூறியது செம்பியன் மாதேவியின் காதிலும் விழுந்தது. அதே சமயத்தில் ஜனக் கூட்டத்தின் செவிகளிலும் விழுந்தது. செம்பியன் மாதேவியின் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. அதைப் பார்த்த ஜனங்கள் மேலும் 'ஓ' என்று கதறினார்கள்.

கூட்டத்தில் முன்புறம் இருந்தவர்களில் ஒருவர், "தாயே! தாங்கள் தஞ்சை போகக்கூடாது. இளைய பிராட்டியும் தஞ்சைக்குப் போகக் கூடாது! சக்கரவர்த்தியை இங்கே வரும்படி செய்ய வேண்டும்" என்று கூவினார்.

"பொன்னியின் செல்வர் கடலில் முழுகிவிட்டார் என்பது பொய். பழுவேட்டரையர்கள்தான் அவரைக் கொன்றிருப்பார்கள்!" என்றார் இன்னொருவர்.

"மதுராந்தகரும் இனித் தஞ்சைக்குப் போகக் கூடாது. இங்கேயே இருக்கவேண்டும்" என்று இன்னொரு குரல் கேட்டது.

"இளைய பிராட்டி எங்கே? அவரை நாங்கள் பார்க்க வேண்டும்!" என்று குரல்கள் கூவின.

செம்பியன் மாதேவி தம் அருகிலிருந்த சேடிகளில் ஒருத்தியைப் பார்த்து இளவரசியை அழைத்து வரச் சொன்னார்.

கீழே கூட்டத்தில் கலந்து நின்று கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானும் அதே சமயத்தில் அங்கிருந்து நகர்ந்து சென்றான்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# நூதனத் திருட்டு



ஒரு பையன் தன்னுடன் படிக்கும் சக மாணவர்களிடம் இருந்து பேனா, பென்சில், ரப்பர், வெள்ளைத் தாள் முதலானவற்றை திருடிக் கொண்டு வந்து விடுவான்.

இந்த வகையில் தந்தைக்குத் தொந்தரவு கொடுக்காமல் இருந்து வந்தான். இவற்றை எல்லாம் தன்னுடைய பணக்கார நண்பர்கள் கொடுப்பதாகக் கூறி வந்தான்.

ஒரு நாள் அந்தப் பையனின் திருட்டை சக மாணவர்கள் கண்டுபிடித்து ஆசிரியர் முன் நிறுத்தி விட்டார்கள்.

ஆசிரியர் திருடிய மாணவனிடம் அவனுடைய தந்தையை அழைத்து வரும்படி கூறினான். அதன்படி அவனுடைய தந்தையும் வந்து சேர்ந்தார்.

ஆசிரியர் பையனின் திருட்டை விபரமாக அவனுடைய தந்தையிடம் கூறினார்.


தந்தை ஆசிரியரிடம் "ஐயா பையன் தவறாக நடந்து விட்டான். மன்னித்து விடுங்கள்.

என்னிடம் சொல்லியிருந்தால் என் அலுவலகத்தில் இருந்து இவற்றை எல்லாம் கொண்டு வந்து கொடுத்திருப்பேன்" என்றார்.

ச. வெலீன்,
[illegible] முன்பள்ளி.

## ஐவகை நிலங்கள்

- **குறிஞ்சி:-** மலையும் மலை சார்ந்த இடமும்
- **மருதம்:-** வயலும் வயல் சார்ந்த இடமும்
- **முல்லை:-** காடும் காடு சார்ந்த இடமும்
- **நெய்தல்:-** கடலும் கடல் சார்ந்த இடமும்
- **பாலை:** மணலும் மணல் சார்ந்த இடமும்




அதிஷ்ரிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் முயற்சிகளுக்கு இடையூறு அளிக்காமல் இருப்பதில் கவனமாய் இருப்பவரே இனிய தன்மை உடையவர். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் வன்முறைகளை பொலிஸார் தடுக்க வேண்டும்

வடக்குக் கிழக்கு மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய மாகாணங்களில் அமைதியான முறையில் தேர்தல் பிரசாரங்கள் நடந்தாகின்றன.

ஆனால் நம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும் இத் தேர்தல் காலத்தில் வன்முறைகள் ஏற்படுகின்ற சூழமைவு கட்டமைக்கப்படுவது தெரிகிறது.

ஆம், நேற்று முன்தினம் இரண்டு வன்முறைச் சம்பவங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடந்துள்ளன.

அதில் ஒன்று சங்குச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் திருமதி சசிகலா ரவிராஜ் அவர்களின் வீட்டின் மீது நடத்தப்பட்ட கல்லெறித் தாக்குதல்.

மற்றையது, நீர்வேலி கரந்தன் பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்.

இத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாக தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது.

இருந்தும் தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யாமல் தாக்குதலுக்கு ஆளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களைக் கைது செய்கின்ற அளவில் பொலிஸாரின் செயற்பாடு இருப்பதாக அந்தக் கட்சியின் வேட்பாளர் சட்டத்தரணி மணிவண்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

உண்மையில் கடந்த பல வருடங்களாக நம் தமிழர் பகுதியில் தேர்தல் பிரசாரங்களின் போது தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுவது மிக அரிது.

அதாவது தேர்தல் வன்முறைகள் மிகக் குறைந்த மாகாணமாக நம் வட மாகாணம் விளங்கியது.

பொதுவில் தென்பகுதியில் தேர்தல் வன்முறைகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது வழமை.

நிலைமை இதுவாக இருக்கையில், தற்போது தென்பகுதியில் அமைதியான முறையில் தேர்தல் பிரசாரங்கள் நடந்தாகின்றன.

முன்னதாக நடந்த ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்ற தேர்தல் என்ற பெருமையைப் பெற்றிருந்தது.

அதேபோன்று நடைபெறப் போகின்ற பொதுத் தேர்தலும் தென்பகுதியில் அமைதி யாக நடைபெறுவதற்கான சூழமைவு காணப்படுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெண் வேட்பாளர் ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலும் அதிர்ச்சியைத் தருவதாகும்.

இத்தகைய தாக்குதல்களை நடத்தியவர்கள் யாவர்? தாக்குதலின் நோக்கம் என்ன? என்றெல்லாம் ஆராயும்போது, எதிர்வரும் பொதுத் தேர்தலை தமிழர் பகுதியில் குழப்புகின்ற திட்டமிடல்கள் ஏதேனும் உண்டோ என்று எண்ணத் தோன்றுகிறது.

எனவே மேற்குறித்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனைப் பொலிஸார் செய்யாத விடத்து, தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மீது சந்தேகம் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் போகும்.

# எல்பிட்டிய பிரதேச சபையின் அதிகாரத்தை கைப்பற்றிய தே.ம.ச

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் முடிவுகளின் 17 உள்ளூராட்சி பிரிவுகளில் 17,295 வாக்குகளை பெற்று தேசிய மக்கள் சக்தி 15 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 7,924 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3,597 வாக்குகளைப் பெற்று, 3 ஆசனங்களை வென்றுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி 2,612 வாக்குகளை பெற்று, 2 ஆசனங்களை வென்றது.

அத்துடன், பொதுமக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி 2,612 வாக்குகளைப் பெற்று, 2 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

சுயேட்சைக்குழு 2,568 வாக்குகளைப் பெற்று, 2 ஆசனங்களை வென்றது. பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி 1,350 வாக்குகளை பெற்று, ஒரு ஆசனத்தை வென்றது. தேசிய மக்கள் கட்சி 521 வாக்குகளைப் பெற்று, ஒரு ஆசனத்தை வென்றுள்ளது.

இதேவேளை எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களின் எண்ணிக்கை 55,643 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

### பிரபல்யம் அடைவதற்காக

# தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்த வேண்டாம்

### சரத்வீரசேகர

(கொழும்பு)

மக்கள் மத்தியில் பிரபல்யமடைவதற்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியதை பயங்கரவாதிகள் பயன்படுத்திக் கொண்டனர் என்பதை நாட்டு மக்கள் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், அறுகம் குடாவில் உள்ள இஸ்ரேலிய பிரஜைகள் மீது தாக்குதல் நடத்த ஒரு தரப்பினர் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க துாதரகம் குறிப்பிட்டுள்ளமை பாரதுாரமானது.

புலனாய்வுப் பிரிவின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை." தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத காரணத்தால் அமெரிக்க துாதரகம் தமது பிரிவுகளுக்கு அவதான எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் கொழும்பில் உள்ள துாதரகங்கள் சந்தேகம் கொண்டால் நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மக்கள் மத்தியில் பிரபல்யமடைய வேண்டும் என்பதற்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையின் பாதுகாப்பு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளமை ஆரோக்கியமானதல்ல. நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியதை பயங்கரவாதி சஹ்ரான் உட்பட்ட தரப்பினர் தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டனர்.

விளைவு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலாக வெளிப்பட்டது. ஆகவே குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# இலங்கை பன்றிகளுக்கு ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல்

### உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதாரத் துறை அறிக்கை

(கம்பஹா)

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பன்றிகளுக்கு முதல் தடவையாக பதிவாகியிருந்த சுவாச நோய் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

எடுக்கப்பட்ட புதிய மாதிரிகளை ஆய்வு செய்ததில் இது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களில் பன்றிகள் திடீரென இறக்கும் சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையில், இது தொடர்பில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் விசேட விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

குறித்த பரிசோதனையின் படி, தெற்காசிய நாடுகளில் சமீபத்தில் பதிவாகிய ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலுடன் மேற்படி பன்றிகள் தொடர்புபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இலங்கையில் இந்நோய் பதிவாகியிருப்பது இதுவே முதல் தடவையாகும். மேலும் இந்த அதிதீவிர நோய்க்கிருமி ஏனைய பகுதிகளுக்கு பரவாமல் தடுப்பதற்காக அந்தந்த பகுதிகளில் உள்ள கால்நடை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, பிரதேச செயலகங்களுக்கு இடையில் பன்றி இறைச்சி விநியோகத்திற்காக, பிரதேச சுகாதார அதிகாரிகளின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கால்நடை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

# தேர்தல் தொடர்பில் 716 முறைப்பாடுகள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 716 ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 225 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 491 முறைப்பாடுகளும் 15 ஏனைய முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 54 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# குறைவடைந்தது மாதாந்த செலவு

(கொழும்பு)

நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில், இந்த வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் குடும்பமொன்றின் மாதாந்தச் செலவு 6,037 ரூபாவினால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உணவு வகைகளுக்கான மாதாந்த செலவும் 2, 885 ரூபாவினால் குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உணவு அல்லாத பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலை குறைவடைந்ததன் காரணமாக, பொது மக்களுக்கு 3, 145 ரூபாய் அனுகூலம் கிடைத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் இணையவழி மோசடிகள்

## பொதுமக்களுக்கு மீண்டும் பொலிஸார் எச்சரிக்கை

**(கொழும்பு) இணையவழி ஊடாக மக்களின் பணம் கொள்ளையிடப்படும் சம்பவங்கள்நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நாட்டில் குழுக்களாக தங்கியிருந்து இணையவழி ஊடாக பொதுமக்களிடம் பணத்தை கொள்ளையடித்த வெளிநாட்டு பிரஜைகளும் இலங்கையர்களும் அண்மைக்காலமாக, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இணைய வங்கிப் பரிவர்த்தனைகளில் வழங்கப்படும் OTP அல்லது ஒரு முறை கடவுச்சொற்கள் மற்றும் பல முக்கிய உத்திகள் மூலம் நிதி மோசடி செய்யப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இவற்றில் ஒரு முறையாக முகநூல், தொலைபேசி அழைப்புகள் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட பல்வேறு நபர்களை வற்புறுத்தி பணத்தை முதலீடு செய்ய வைப்பதன் ஊடாக இந்த மோசடிகள் இடம் பெறுகின்றன.

இவை தவிர இந்த ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினர் சமூக ஊடகங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட நடுத்தர வயது மற்றும் முதியவர்களுடன் போலியான காதல் உறவுகளை உருவாக்கி, அந்த நம்பிக்கையின் அடிப்படையில் பண மோசடியில் ஈடுபடுகின்றனர்.

மேலும் சமூகத்தில் பிரபலமானவர்கள் போல் நடித்து பல்வேறு திட்டங்களுக்கு அழைப்பு விடுத்து பணம்பெறும் செயற்பாடுகளும் இந்த நாட்களில் பதிவாகி வருகின்றன.

இந்நிலையில் பொது மக்களை விழிப்புடன் செயற்படுமாறும் இது தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் உடனடியாகத் தெரியப்படுத்துமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 320 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 320 | 350 | 320 | 450 |
| தக்காளி | 300 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 220 | 200 |
| கோவா | 250 | 280 | 250 | 300 |
| கரட் | 180 | 200 | 250 | 250 |
| பூசணி | 100 | 80 | 200 | 150 |
| புடோல் | 100 | 180 | 120 | 250 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 300 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 220 | 250 | 350 |
| பாகற்காய் | 450 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 100 | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 240 |
| பயற்றங்காய் | 450 | 250 | 150 | 350 |
| லீக்ஸ் | 180 | 350 | 220 | 320 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 650 | 550 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 200· | 120 | 120 | 400 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | 450 | -- | 400 | 500 |
| முள்ளங்கி | 120 | 120 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 50 | 200 |

# இன்று ஒரு தகவல் 252



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## பக்தியும் பகல் வேஷமும்!

ஒரு ஊரிலே ஒரு சாமியார் இருந்தார். அவரைச்சுற்றி ஏகப்பட்ட கூட்டம். கடவுளைப்பற்றி அந்த சாமியார் நிறைய கதை எல்லாம் சொல்லுவார். சுற்றி இருக்கின்ற கூட்டமும் அதை ஆவலாகக் கேட்டுக் கொண்டிருக்கும். நமது ஊரிலே பக்தர்களுக்கா பஞ்சம். இதைக் கேட்ட கடவுளுக்கே மனதுக்குள்ளே மிகவும் பெருமையாக இருந்தது. நமது பெருமையை எடுத்துச் சொல்வதற்கும் பூலோகத்திலே நிறையப் பேர் இருக்கிறார்கள். அதைக் கேட்பதற்கும் நிறையப் பேர் இருக்கிறார்கள். மக்களிடம் கடவுள் பக்தி நிறைய இருக்கத்தான் செய்கிறது என்று நினைத்தார்.

சரி நேரிலே அங்கே சென்று எல்லோரையும் பார்த்து பேசிவிட்டு வரலாம் என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டு பூலோகத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவர் இங்கே வந்து சேர்ந்த நேரம் ரொம்ப நல்ல நேரம். ஒரு கோயிலிலே ஏதோ விஷேசம்.அங்கே அந்த சாமியார் ஏதோ பக்திப் பிரசங்கம் செய்து கொண்டு இருக்கிறார். மக்கள் கூட்டமாக உட்கார்ந்து அதைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

கடவுள் அப்படி இருப்பார் இப்படி இருப்பார் என்று அந்த சாமியார் ஏதோ கடவுளை நேரிலே பார்த்த மாதிரி வர்ணித்துக் கொண்டு இருந்தார். கூட்டம் முடிந்தது. மக்கள் எல்லோரும் வெளியே வந்தார்கள்.

கோயிலுக்கு வெளிப்பக்கத்தில ஒரு அரசமரம். அந்த அரச மரத்திற்கு அடியில் உண்மையான கடவுள் நின்றுகொண்டு இருக்கிறார். உலகத்தைச் சுற்றிப் பார்க்க வந்தவர். வெளியிலே வந்த ஒரு பக்தர் அவரைப் பார்த்தார். ஆச்சரியப்பட்டார். அவர் கடவுளிடம் சென்றார். பலே! கடவுளைப் போலவே வேஷம் போட்டிருக்கிறியே. சபாஷ் வேஷப் பொருத்தம் மிகவும் நன்றாக இருக்கின்றது என்றார். கடவுளுக்கு தூக்கி வாரிப்போட்டது. என்னப்பா இது இப்படி சொல்கிறாய்? நான் தான் கடவுள் என்றார் அவர்.

இதோ பார் இப்படி என்னிடம் சொன்னதோடு நிறுத்திக் கொள். சத்தம் போட்டுச் சொன்னால் உனக்கு மூளைக் கோளாறு என்று எல்லோருக்கும் தெரிந்து விடும். அப்புறம் உன் மீது கல்லை எடுத்து எறிவார்கள். அதன் பின்பு என்னை கோபித்துக் கொள்ளாதே என்று எச்சரித்தார் பக்தர்.

இதோ பாருப்பா நான் சொல்வதைக் கேளு என்று இவர் ஆரம்பித்தார்.

நீ சொல்லுவதை நான் கேட்பதை பிறகு பார்ப்போம். முதலிலே நான் சொல்வதை நீ கேள். உள்ளே இருந்து எங்கள் சாமியார் வருவதற்குள்ளே நீ இடத்தை காலி பண்ணி விடு இல்லை என்றால் விடயம் விபரீதமாகப் போய்விடும் என்றார் இவர்.

யாரு? உங்கள் சாமியார் தானே வருகிறார். வரட்டும் அவருக்கு என்னை நன்றாக அடையாளம் தெரியும். ஏன் என்றால் நான் எப்படி இருப்பேன் என்பதை அவர் தானே தினமும் உங்களுக்கு எடுத்து சொல்லிக் கொண்டு இருக்கின்றார் என்றார். இது ஏதுடா வம்பாய்ப் போய்விட்டதே! என்றார் அந்த பக்தர்.கொஞ்ச நேரம் பார்த்து விட்டு சரி வாருங்கள் போகலாம் என்று பக்தர்களும் கலைந்து போய்விட்டார்கள்.

அந்த ஒரு பக்தர் மட்டும் உள்ளே போய் சாமியாரிடம் விபரத்தைச் சொன்னார். சாமி யாரோ ஒருவன் கடவுள் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து நின்று குழப்பம் செய்கிறான் என்றார்.

சாமியார் கோபமாக வெளியே வந்தார். ஏம்பா இப்படி வந்து இங்கே கலாட்டா செய்கிறாய் பேசாமல் போய்விடு என்றார்.

இவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவர் கேட்கவில்லை! கடைசியிலே ஒரு அறையிலே இவரைத் தள்ளி கதவைச் சாற்றி பூட்டிவிட்டார்கள்.

கடவுளுக்கு மிகவும் சங்கடமாய்ப் போய்விட்டது. கண்ணை மூடிக்கொண்டு போய் பேசாமல் உட்கார்ந்து விட்டார்.

நடுராத்திரியில் அந்தச் சாமியார் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். கடவுள் காலிலே விழுந்தார். கடவுளே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! காலையிலேயே நீங்கள் யார் என்பதை அடையாளம் கண்டு கொண்டேன். நீங்கள் தான் நிஜக் கடவுள் என்று நான் சொல்லியிருந்தால் ஜனங்கள் என்னையும் மெண்டல் கேஸ் என்று நினைத்து உங்கள் கூடவே சேர்த்து உள்ளே தள்ளியிருப்பார்கள். அது தான் அப்படி நடந்து கொண்டேன் என்றார்.

கடவுள் அதன் பின் ஒரு வழியாக மேலே வந்து சேர்ந்தார். வந்த பின்பு கொஞ்சம் கவலையோடு உட்கார்ந்து இருந்தார்.

பக்கத்திலே இருந்த அவருடைய தேவி ஏன் இன்னமும் கவலையோடு இருக்கிறீர்கள். பூலோகத்திலே பக்தர்கள் தானே அப்படி உங்களை சரியாக புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். குருமார்கள், சாமியார்கள் உங்களைப் புரிந்து கொண்டு தானே இருக்கிறார்கள். என்று சொன்னார் தேவி.

அந்தச் சாமியார் தான் என்னுடைய கவலைக்குக் காரணம். புரியாத பக்தர்கள் என்னைப் போய்விடு என்று சொன்னார்கள். அது ஒன்றும் பெரிது இல்லை.

புரிந்து கொண்ட அந்தச் சாமியாரும் என்னை உடனே புறப்பட்டு போய்விடு என்று சொன்னது தான் கவலையாக இருக்கிறது.

ஏன் என்னை போகச் சொல்லுகின்றாய் என்று கேட்டேன். அதற்கு அந்த சாமியார் என்ன சொன்னார் தெரியுமா?

என்ன சொன்னார்? என்று கேட்டார் தேவி!

நீங்கள் இங்கே வந்து விட்டால் எங்கள் பிழைப்பு கெட்டுப் போய்விடும் என்றார் சோகமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாவிகளை...

அந்தப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் எனவும் சுற்றுலாப் பயணிகளிடம் கூறியுள்ளார்.

இது தொடர்பில் குறித்த சுற்றுலாப் பயணிகள் பொலிஸாரிடம் முறைப்பாடளித்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அம்பாறை சாய்ந்தமருதுப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## பிரிக்ஸின்...

என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அந்த அமைப்பின் உறுப்பு நாடுகளை ஒன்பது என்ற எண்ணிக்கையில் தக்கவைக்கும் முடிவைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அமைப்பின் பங்காளி உறுப்பு நாடாக இணைவதற்கு இலங்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் உறுப்பு நாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் பிரிக்ஸின் புதிய அபிவிருத்தி வங்கியில் இணைவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, புதிய அபிவிருத்தி வங்கியில் இணைவதற்கான யோசனைக்கு இலங்கையின் அமைச்சரவை விரைவில் அங்கீகாரம் வழங்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## யானை தாக்கி...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு முத்தையன்கட்டுக் குளப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அரணுக்குக் கீழ் நேற்று மாலை வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையை விரட்டி வந்துள்ளனர்.

அவர்களுடன் இணைந்து குறித்த இளைஞனும் யானையை விரட்டியுள்ளதாக தெரியவருகின்றது. இதன்போது குறித்த இளைஞனை யானை தாக்கியுள்ளது. அதனையடுத்து இளைஞனை ஒட்டுசுட்டான் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்துள்ளார்.

இதில் ஒட்டுசுட்டான் முத்துவிநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கேந்திரராசா பிரசாத் என்ற 21 வயதுடைய இளைஞனே உயிரிழந்தவராவார்.

இளைஞனின் சடலம் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்கள். (ந-7,299)

## கிணற்றில்...

டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த கோப்பாய் பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்ததோடு சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மரண விசாரணைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,60)

## யாழ்.மண்ணுக்கு...

களம் அறிவித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக இன்று காலை 5.45 மணியளவில் யாழ் தேவி கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து காங்கேசன் துறை நோக்கிய தனது பயணத்தை ஆரம்பிக்கும்.

இதனைத் தொடர்ந்து நாளை கொழும்பு யாழ்ப்பாணம் இருவழி சேவைகளையும் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ந-7)

## தாக்குதல்...

முன்னெடுத்துச் செல்வதாக, யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை நீர்வேலி கரந்தன் பகுதியில் வன்முறைக் கும்பல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டதில், பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பொலிஸார் கைவிலங்கிட்டுள்ளனர்.

கைவிலங்கிடப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தனது ஆதரவாளர்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தாக்குதலில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் எங்கள் கட்சியின் ஆதரவாளர்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்ய முயன்றுள்ளனர்.

பின்னர் எமது ஆதரவாளர்களுக்கு வைத்தியசாலைக் கட்டிலுடன் சேர்த்து கைவிலங்கிட்டுள்ளனர். கட்டிலுடன் கைவிலங்கிடப்பட்டுள்ள நிலையிலேயே அவர்கள் வைத்திய சிகிச்சையை பெற்று வருகின்றனர்.

தாக்குதல் நடந்து 24 மணி நேரம். கடந்தும் தாக்குதல் நடத்தியவர்களைப் பொலிஸார் கைது செய்யவில்லை.

இதனைப் பார்க்கும்போது இந்தத் தாக்குதல் சம்பவம் மிகப் பெரிய அரசியல் பின்னணியில், புலனாய்வாளர்களின் பங்களிப்புடன் நடந்ததாகவே நாங்கள் சந்தேகிக்கின்றோம். பொலிஸாரின் அசமந்தப் போக்கான நடவடிக்கை எமது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தன்னை ஊழலுக்கு எதிரான நேர்மையான அரசியல்வாதியாகக் காட்டிக்கொண்டு தன்னுடைய பொலிஸ் திணைக்களம் ஊடாக மிகக் கீழ்த்தரமான அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றார் என்பதற்கு இந்தத் தாக்குதல் சம்பவம் மிகப் பெரிய சான்றாக உள்ளது.

தாக்குதல் நடைபெற்று 24 மணிநேரம் கடந்த நிலையிலும் தாக்குதலை மேற்கொண்ட 30 பேரில் ஒருவரையேனும், பொலிஸார் கைது செய்யவில்லை.

இதனைப் பார்க்கும்போது, தாக்குதலாளிகளுடன் பொலிஸார் நல்லுறவைப் பேணுவதாகவும், அவர்களுடன் பொலிஸாரும் சேர்ந்து இயங்குவதாகவும் நம்பகமாக அறிகின்றோம்.

கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் இரவும் கூட தாக்குதலாளிகளுடன் சேர்ந்து இருந்துள்ளதாக நமக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளது, அதனை உறுதிப்படுத்துவது போலவே பொலிஸாரின் நடவடிக்கையும் காணப்படுகிறது.

அதேவேளை இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் தமிழ்க் கட்சி ஒன்று உள்ளதாகவும் எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டி வருகிறோம். மிக விரைவில் அவர்களை மக்களுக்கு அடையாளப் படுத்துவோம் என சட்டத்தரணி மணிவண்ணன் மேலும் தெரிவித்தார். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2024.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 5638 — J 2 3 4 4 5 8
அத சம்பத — J 4 4 5 8 — சீட்டிழுப்பு இலக்கம் 213

தன நிதானய — திகதி 2024.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 1668 — E 11 12 44 50 E — 007116

மெகா பவர் — திகதி 27/10/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1986 — O 24 21 31 59 61 — 092097

லக்கி 7 VIP — திகதி 2024.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0464 — X 3 1 4 9 7 5 X

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3880 — சீட்டிழுப்பு திகதி 27.10.2024 — R 14 15 16 46 — R 026683

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.10.27 — சீட்டிழுப்பு இலக்கம் 947 — ரிஷபம் 13 52 54 58 ரிஷபம் — 034481 — 34

உத்தியோகபூர்வ முடிவுகள் — 27.10.2024 — வெற்றி வாரம் 346 — R 0 2 5 6 0 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,512,332.00 — 38166

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2612 — வர்ணம் ஆரஞ்சு நிறம் — சீட்டிழுப்பு திகதி 27.10.2024 — தினம் ஞாயிறு — 01 15 56 66 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,323,101.60

சனிதா — திகதி 2024.10.27 — வெற்றி வாரம் 4773 — 06 19 22 36 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,376,998.40 — 34138

சசிரி — வெற்றி வாரம் 546 — சீட்டிழுப்பு திகதி 2024.10.27 — கபிலம் — 01 02 14 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,336,280/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4324 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2024.10.27 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 07 13 24 28 மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,871,355.20 — 131468

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — 1788 — மஞ்சள் — 27.10.2024 ஞாயிறு — E 33 11 52 63 67 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 552,806,339.00

அட கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2438 — சீட்டிழுப்பு திகதி 2024.10.27 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,660,725.60 — 03 17 48 53 I — 206438


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (493)

076 825 7716 (ஆகாஸ்)

## மணமகன் தேவை

- உடுப்பிட்டி, இந்து, கௌரவ குடும்பம், 1981, மிருசீரிடம், Bsc, Singapore citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- மீசாலை, இந்து, கௌரவ குடும்பம், 1993, சதயம், 5' 10" உயரம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- புங்குடுதீவு, இந்து, கௌரவ குடும்பம், 1989, புனர்பூசம், Masters in Phycology, Norway, Citizen fair, Slim பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- நயினாதீவு - காரைநகர், இந்து, கௌரவ குடும்பம், 1996, பூராடம், MD Doctor, USA பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வட்டுக்கோட்டை, இந்து, கௌரவ குடும்பம், 1990, ரேவதி, Masters Degree, UK, அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- திருநெல்வேலி, இந்து, கௌரவ குடும்பம், 1982, மிருகசீரிடம், Msc, Associate Director, Divorce, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- பருத்தித்துறை - சண்டிலிப்பாய், இந்து, கௌரவ குடும்பம்,1991, பூசம், BSc(uk), cima(uk), Accountant, uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர், இந்து, கௌரவ குடும்பம், 1995, ஆயிலியம், Masters of Pharmacy (UK university), Denmark இல் பிறந்த uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அச்சுவேலி, இந்து, கௌரவ குடும்பம், 1992, ரேவதி, Graduate,Accountant, uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(2518)

S.Sharma J.P
Astrology
- 077 539 3728
- 077 803 8193

## நாட்டிலுள்ள...

என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டப் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி அநுர, சுகாதார அமைச்சராக இருந்தவர் எவ்வாறு வியாபார அரசியலை முன்னெடுக்கிறார் எனில், தரமற்ற மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்கிறார்.

உபகரணக் கொள்வனவில் பணம் கொள்ளையடிக்கிறார். இதனால் என்ன நடக்கும் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலையும்.

முதலீட்டுத் திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். காற்றாலை உள்ளிட்ட திட்டங்களைக் கொண்டு வருகையில், அமைச்சர் பணம் கேட்கிறார். அதுவும் செலவில் சேர்கிறது எனவே எவ்வாறு நாட்டினை இலாபகரமாகக் கொண்டு செல்ல முடியும்.

ஆகவே இந்த அரசியல் வியாபாரிகள் அகற்றப்பட வேண்டும். மக்கள் சேவையை உன்னதமாக நினைப்பவர்களால் பாராளுமன்றை நிரப்ப வேண்டும்.

இன்று (நேற்று) முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அனுபவம் உள்ளவர்களையே பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் எனக் கோரினார்.

எதற்கு அனுபவம் வேண்டும். பதிவு செய்யாத வாகனங்களைப் பயன்படுத்துவதற்கா? அவர்களுக்குப் பாராளுமன்றில் சண்டையிட்ட அனுபவம் உள்ளது. கத்தி கொண்டு வந்த அனுபவம் உள்ளது. மிளகாய்ப் பொடி கொண்டு வந்த அனுபவம் உள்ளது. திருடிய அனுபவம் உள்ளது.

ஆகவே இவ்வாறான அனுபவசாலிகளையே அவர் மீண்டும் பாராளுமன்றம் அனுப்புமாறு கோருகிறார்.

எம்மிடம் அவர்கள் கூறும் அனுபவம் இல்லை. ஆனால் அரசியல் அனுபவம் உள்ளது. மக்கள் சேவையில் தேசிய மக்கள் சக்திக்கு அனுபவம் உள்ளது என்றார். (ந-7)

மொத்தக் கொள்வனவு

அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (494)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/=
90/=
077 773 0900

வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும்
மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1400/= France 2300/=
Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
TCN Express
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
(488)
T.P - 077 755 4528

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் சில நாட்களே உள்ளன
அமெரிக்க அதிஷ்ட விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
55000 இலவச விசாக்கள்
0768226244
V2 Travels
0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351
0764550673 | 0768226240 | 0768226243 | 0777068777 | 0777720322 | 0764550675
0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322
0764550671 | 0776699892 | 0768226236 | 0768226230 | 0776697960

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மரண அறிவித்தல்



தோற்றம்
31 - 03 - 1939

மறைவு
23 - 10 - 2024

### திருமதி கோபாலசிங்கம் சரஸ்வதி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் சரஸ்வதி அவர்கள் கடந்த 23.10.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை கோபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஜீவா (கனடா), ஜீவநந்தினி (லண்டன்), காலஞ்சென்ற ஜீவசொரூபி (சுவிஸ்), ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு - வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வரதலக்சுமி (வாசுகி- கனடா), ரஜீந்திரன் (லண்டன்), கிருபாகரமூர்த்தி (சுவிஸ்), லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவன், கௌசிகன் (கனடா), றொஷானி, கிருஷான் (லண்டன்), மிதுர்ஷன், ஜதுர்ஷன் (சுவிஸ்), டிலோஷன், பிரியந்தன், ஹாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.10.2024 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.34,பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(2396)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
11 - 09 - 1972

மறைவு
27 - 10 - 2024

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எமது அணியின்
முகாமைத்துவப் பிரிவு நண்பன்

### அமரர் சிவகுரு மோதிலால்

(அபிவிருத்தி உத்தியோகத்தர், தலைவர் – வருமான வரிப் பிரிவு – நகர சபை, வவுனியா)

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத் துயரில்
ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சித்து நிற்கின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

யாழ்.பல்கலைக்கழக 1995/96 அணி நண்பர்கள்

(C-1464)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.